**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.210/2022**

**தேதி : 16.03.2026**

**(பி.வா.சா.1) – திரு. காளிமுத்து**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (வாதிகள் தரப்பில்)**

1. நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியும். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சர்வே எண்.458/2 சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது. அதில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எல்லாம் எனக்கு நேரடியாகத் தெரியும். சர்வே எண்.458/2 சொத்துக்கு கிழபுறம் தார் ரோடு உள்ளது. அந்த சொத்துக்கு வடபுறம் சர்வே எண்.457ல் வாதிகள் கிரையம் பெற்ற பாதை உள்ளது என்றால் சரிதான். தென்புறம் அரசு புறம்போக்கு இட்டேரி மண் பாதை உள்ளது.

2. சர்வே எண்.458/2க்கு மேல்புறம் என்னுடைய வீடு உள்ளது. அந்த வீட்டுக்கு 30 அடி தாண்டி சர்வே எண்.458/1ல் வழக்குச் சொத்து அல்லாத எனக்குப் பாத்தியப்பட்ட வேறு சொத்து உள்ளது. சர்வே எண்.458/2ல் சரிபாதி சொத்தை பிரித்துக்கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் தென்வடலாக பிரித்துக்கொள்வதற்கு எனக்கு சம்மதம். நான் வீடு கட்டி ஒரு வருடம் இருக்குமா என்றால் பழைய வீட்டை மராமத்து செய்துள்ளேன். 2 வருடங்கள் மேலாகிவிட்டது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பழைய வீட்டை மராமத்து செய்து நான் கிரகப்பிரவேசம் முடித்துவிட்டேன். நான் கூறுவது தவறு என்றும், பிரிவினை இல்லாத சொத்தில் நான் வீடு கட்ட ஆரம்பித்த பிறகுதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் நான் பழைய வீட்டைத்தான் மராமத்து செய்துள்ளேன்.

3. சர்வே எண்.457/5ல் ஒரு கிணறு உள்ளது. அதில் வாதிகளுக்கு 8ல் 3 பாகம் உள்ளது என்றால் சரிதான். எனக்கு 8ல் 5 பாகம் உள்ளது. சர்வே எண்.458/1ல் உள்ள கிணற்றில் வாதிகளுக்கு பொதுவில் பாதி உள்ளது என்றால்

**சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் 'ஏ' செடியூல் சொத்தில் வாதிகளின் தரப்பினர் ரகுபதிக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளுக்கு மேற்படி கிணற்றில் சரிபாதி பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை :-</u> இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI Digitally signed by K. BHARATHI Date: 2026.03.16 14:21:11 +0530

Additional Sub Judge,
Palani.